ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1800/22 - 2013 මාර්තු මස 06 වැනි බදාදා - 2013.03.06

1800/22 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை நிலஅளவை கள உதவியாளர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1991.12.11 ஆந் திகதிய 692/14 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை கள நிலஅளவையாளர்கள் சேவை பிரமாணக் குறிப்பிற்கு மற்றும் அதற்குக் காலத்திற்குக் காலம் செய்யப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட அல்லது அதன் கீழ் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்ற யாதேனும் ஒரு நடவடிக்கைக்கு பங்கம் விளைவிக்காதவாறு பின்வரும் நிலஅளவை கள உதவியாளர்கள் பிரமாணக் குறிப்பு வெளியிடப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ். எம். டபிள்யூ. பர்னாந்து,
நிலஅளவையாளர் நாயகம்.

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்,
இல. 150, கிருல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு - 05.

1. **நடைமுறைக்கு வரும் திகதி** : இச்சேவைப் பிரமாணக் குறிப்பு 2012.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

2. **நியமனம் செய்யும் அதிகாரி** : அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர் நாயகம்.

3. **சேவை வகை பற்றிய விபரம்** :

3.1 சேவை வகை :- ஆரம்ப மட்டம் - பகுதித் திறன்
3.2 தரங்கள் :- III, II, I விசேட தரம்

4. ஒப்படைக்கப்படும் பணிகள் நிறுவனத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கும் நடத்திச் செல்வதற்கும் தேவையான அடிப்படை வசதிகள் வழங்குவதற்கு உரிய நிர்மாணிப்புகள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு போன்ற பணிகளிடையே மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டபடி தேசியத் தொழிற் பயிற்சி தகைமைகளில் (NVQ) இரண்டாவது அல்லது மூன்றாவது மட்டத்துக்குக் குறையாத மட்டத்திலான தேர்ச்சி/தொழில் நிபுணத்துவம் தேவைப்படும் பணிகள் இச்சேவை வகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளிடையே நியமனம் செய்யும் அதிகாரியினால் அவ்வப் பதவிகளுக்கு ஏற்புடையதென விசேடமாய் குறிப்பிடப்படும் பணிகள் அப்பதவிக்கு ஒப்படைக்கப்படும்.

5. **சம்பளம்** :

5. 1. சம்பள குறியீட்டு இலக்கம் :- PL 2 - 2006 (A)

5.2. சம்பள அளவுத்திட்டம் :- ரூபா 12, 210- 10x130-10x145- 10x160- 12 x170- 18,600.

5.3 தரத்திற்கேற்ப ஆரம்ப சம்பள படிநிலை :-

| தரம் | சம்பளபடி முறை | சம்பள அளவு ரூபா |
|---|---|---|
| III | 01 | 12,210.00 |
| II | 12 | 13,655.00 |
| I | 22 | 15,120.00 |
| விசேட | 32 | 16,730.00 |

6. **சேவைக்கு உரித்துடைய பதவிகள் :-**

6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் பதவிகளின் எண்ணிக்கை :-

| அங்கீகரிக்கப்பட்ட பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|
| நிலஅளவை கள உதவியாளர் - விசேடம் | 163 | பின் இணைப்பு "அ"வில் காட்டப்பட்டுள்ளது |
| நிலஅளவை கள உதவியாளர் - I | 809 | |
| நிலஅளவை கள உதவியாளர் - II | 1,561 | |
| நிலஅளவை கள உதவியாளர் - III | 1,621 | |
| மொத்தம் | 4,154 | |

6. 2 இணைந்த அலுவலர் எண்ணிக்கை :- 4,154

தரத்திலிருந்து தரத்துக்கு பதவியுயர்த்தும் செயற்பாட்டின் பொருட்டு III, II, I விசேட தரங்கள் சகலதும் இணைந்த அலுவலர் எண்ணிக்கைக்குரியதாக கருதப்படும்.

6.3 பதவியின் தன்மை : நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

6.4 இலங்கை நிலஅளவை கள உதவியாளர் சேவை பின் இணைப்பு "ஆ" இல் காட்டப்பட்டுள்ள, அரச திணைக்களங்களில் சேவையின் பொருட்டு வெவ்வேறாக சகல தரங்களுக்கும் உள்ளீர்க்கப்படும் அல்லது நியமிக்கப்படும் அரச ஊழியர்களை உள்ளடக்கியது.

**குறிப்பு** .- தரங்களின் அடிப்படையில் பணிகள் ஒப்படைக்கப்படாததோடு, இச்சேவை வகையின் கீழமைந்த உரிய பதவிக்குரிய பணிகளில் எந்தவொரு பணியையும் சேவையின் தேவைக்கமைய முது முறை மற்றும் திறமை அடிப்படையில் எந்தவொரு தரத்திலுமுள்ள ஊழியருக்கு நிறுவனத் தலைவரால் ஒப்படைக்கப்பட முடியும்.

7. **ஆட்சேர்ப்பு முறைமை :-**

7.1 ஆட்சேர்ப்பு விகிதம் :-

| முறை | சதவீதம் |
|---|---|
| திறந்த | 100% |
| மட்டுப்படுத்தப்பட்ட | - |
| திறமை அடிப்படை | - |

7. 2. திறந்த ஆட்சேர்ப்பு :-

7.2. 1 ஆட்சேர்ப்பு செய்யும் தரம் :- தரம் III

7. 2. 2 தகைமைகள் :-

7. 2. 2. 1. கல்வித் தகைமைகள்.- கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

7.2.2.2 தொழில்சார் தகைமை.- உரிய பதவிக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு தேசிய தொழிற் பயிற்சித் தகைமையில் (NVQ) குறைந்த பட்சம் இரண்டாவது மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

7.2.2.2.1 ஆகக் குறைந்த நிபுணத்துவம் :

(i) நில அளவைக் களத்தை இனங்கான உதவுதல் ;
(ii) அளவை உபகரணங்களையும் கருவிகளையும் பாதுகாத்தலும் பராமரித்தலும்.

7.2.2.3 அனுபவம் ஏற்புடையதன்று.

7.2.2.4. உடல் சார் தகைமைகள்.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் உள ரீதியான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7.2.2.5. ஏனையவை :-

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு அவசியமான 7.2.3. வரை காட்டப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தையும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதியன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.2.3.1. ஆகக் குறைந்தது :- 18 வருடங்கள் .
7.2.3.2. ஆகக் கூடியது :- 45 வருடங்கள்

(அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிப்போர்க்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

7.2.4 **ஆட்சேர்ப்பு முறை** :-

(i) நிலஅளவையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் அவரினால் நியமிக்கப்படும் தலைவர் உட்பட நிறைவேற்று தர வகையைச் சார்ந்த அலுவலர்கள் அடங்கலாக மூவர் அடங்கிய நேர்முகப் பரீட்சை சபையினால் விண்ணப்பதாரின் தகைமைச் சான்றிதழ்களை சரிபார்ப்பதன் பொருட்டு மாத்திரம் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு, பின்னர் எழுத்துப் பரீட்சையில் விண்ணப்பதாரி பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் மாத்திரம் தரம் III இல் நிலஅளவை கள உதவியாளராக சேர்த்துக்கொள்ளப்படுவர் ;

(ii) சேர்த்துக் கொள்ளப்படும் நிலஅளவை கள உதவியாளர்களுக்கு நிலஅளவைத் திணைக்களத்தின் பயிற்சி நிலையத்தில் ஒரு மாத கால கள மற்றும் கோட்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

7.2.4.1. எழுத்துப் பரீட்சை :-

| பாடங்கள் | உச்சப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடையத் தேவையான புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொது அறிவு | 100 | 40 |
| நுண்ணறிவு | 100 | 40 |

(பாடத்திட்டம் பின் இணைப்பு "இ" இல் காட்டப்பட்டுள்ளது.)

7.2.5. **விண்ணப்பங்கள் கோரப்படும் முறை**.- அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடுவதன் மூலம் அல்லது பகிரங்க அறிவித்தல் மூலம் அல்லது இணையத்தளத்தில் அறிவித்தலை வெளியிடுவதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

7. 3. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு - ஏற்புடையதன்று
7.4 திறனடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - ஏற்புடையதன்று

**8. வினைத்திறன் காண் தடை :-**

8.1

| எந்த வினைத்திறன் காண் தடை என்பது பற்றி | வினைத்திறன் காண் தடையிலிருந்து விடுபடுவது எத்தனை ஆண்டுகளின் பின்னர் | வினைத்திறன் காண் தடையின் தன்மை எழுத்து மூலம்/சான்றிதழ் பாடநெறி /பிற |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன் காண் தடை | III ஆவது தரத்திற்கு நியமனம் பெற்று (03) மூன்று வருடங்களுக்கு முன்னர் | திறமை தொடர்பில் செய்முறை பரீட்சை (பின் இணைப்பு "ஈ") |
| 2 ஆவது வினைத்திறன் காண் தடை | II ஆவது தரத்திற்கு பதவி உயர்வு பெற்று (03) மூன்று வருடங்களுக்கு முன்னர் | எழுத்துப் பரீட்சை (பின் இணைப்பு "உ") |
| 3 ஆவது வினைத்திறன் காண் தடை | I ஆவது தரத்திற்கு பதவி உயர்வு பெற்று (05) ஐந்து வருடங்களுக்கு முன்னர் | வாய்மொழி மூல பரீட்சை (பின் இணைப்பு "ஊ") |

8. 2 பரீட்சை எவ்வளவு காலத்துக்கு ஒரு முறை நடத்தப்படும் ? வருடத்திற்கு இரு முறை நடத்தப்படும்.

8.3 விளைத்திறன் காண் பரீட்சையினை நடத்துவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டவர் ?
நிலஅளவையாளர் நாயகம்

9. அரச கரும மொழிகள் தேர்ச்சி :

9.1.

| மொழி | பெறப்படவேண்டிய தேர்ச்சி |
|---|---|
| அரச கரும மொழி | அரச கருமமொழி அல்லாத மொழி மூலம் ஒன்றில் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒருவர் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியினை தகுதி கூர் காலத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| மற்ற அரச கருமமொழி | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 இன் பிரகாரம் 3 ஆவது மட்டத்தில் தேர்ச்சி பெறல் வேண்டும் |

10. **தரம் உயர்த்துதல்** :-

10.1 III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்கு தரம் உயர்த்துதல்.
10.1. 1. சாதாரண செயலாற்றுகைக்கு ஏற்ப -
10.1.1.1. பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் :-

(i) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) ஊழியர் வகையில் தரம் III இல் ஆகக் குறைந்தது 10 வருடம் சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினை பூர்த்தி செய்திருத்தல் ; மற்றும் பத்து (10) சம்பள ஏற்றங்களை பெற்றிருத்தல் ;

(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கு அமைய பதவி உயர்வு திகதிக்கு நேர் முன்னதாக 10 வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகை மட்டத்தை காண்பித்திருக்க வேண்டும் ;

(iv) பதவி உயர்வு திகதிக்கு நேரடி முன்பதாக ஐந்து (05) வருட சேவையை திருப்திகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்;

(v) உரிய மட்டத்தில் மற்ற அரச கரும மொழித் தேர்ச்சியை பெற்றிருத்தல் வேண்டும் ;

(vi) உரிய வினைத்திறன் காண் பரீட்சையை உரிய திகதியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

10.1.1.2. பதவி உயர்வு வழங்கும் முறை :-

தமது தகைமைகளைப் பூர்த்தி செய்த அலுவலர்கள், அதற்கான படிவத்தில் விண்ணப்பத்தை நியமன அதிகாரிக்கு சமர்ப்பித்ததும் நியமன அதிகாரி தகைமைகளை சரிபார்த்த பின் தகைமையுள்ள ஊழியர்களை தகைமைபெறும் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் தரம் II இற்கு பதவி உயர்த்துவார்.

10.1. 2 அதிவிசேட செயலாற்றுகைக்கு அமைவாக -
10. 1. 2.1 பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் :-

(i) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) அலுவலர் வகையில் தரம் III இல் ஆகக் குறைந்தது ஆறு (06) வருட சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ; மற்றும் உரிய திகதியில் ஆறு (06) சம்பள ஏற்றங்களும் உழைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கு அமைய பதவி உயர்வுத் திகதிக்கு நேர்முன்னதாக ஆறு (06) வருட காலத்தில் அதி விசேட செயலாற்றுகையை வெளிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

(iv) பதவி உயர்வுத் திகதிக்கு நேர் முன்னதாக ஐந்து (05) வருட காலப்பகுதியில் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(v) உரிய திகதிக்குள் குறித்த வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(vi) மற்றைய அரச கரும மொழியில் உரிய மட்டத்தில் உரிய திகதியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

10.1.2.2. பதவி உயர்வுக்கான நடைமுறை : மேற்கூறிய தகைமைகளை பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு நியமன அதிகாரி அங்கீகரிக்கும் நிறுவனத்தினால் நடத்தப்படும் எழுத்துமூல பொது உளச்சார்புப் பரீட்சை ஒன்றிற்கு தோன்ற முடியும். இதில் சித்திபெறுவோரினால் அதற்குரிய படிவத்தில் நியமன அதிகாரிக்கு வேண்டுகோள் ஒன்று விடுக்கப்படுமிடத்து நியமன அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும். உரிய ஏனைய தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு நியமனத் திகதியிலிருந்து ஆறு (06) வருடங்கள் பூர்த்தியாக்கும் திகதி தொடக்கம் செயல்வலுப்பெறும் விதத்தில் தரம் II இற்கு நியமனம் செய்யும் அதிகாரியினால் பதவி உயர்வு வழங்கப்படும்.

**குறிப்பு** :-

* அதிவிசேட செயலாற்றுகையின் கீழ் பதவி உயர்வு வழங்கப்படும் போது நடத்தப்படும் பரீட்சையில் சித்திபெறுவதற்கு ஒரு விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 60% புள்ளிகளைப் பெற வேண்டும். மேலும், அதிவிசேட செயலாற்றுகையின் கீழ் பதவி உயர்வுக்கான பரீட்சை வருடமொன்றுக்கு ஒரு தடவை நடத்தப்படும் என்பதுடன் இப்பரீட்சைக்கு உத்தியோகத்தர் ஒருவரினால் ஒரு தடவை மாத்திரமே தோற்ற முடியும்.

* உத்தியோகத்தர் ஒருவர் அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விசேட காரணங்களினால் உரிய திகதியில் அதிவிசேட செயலாற்றுகையின் கீழ் பதவி உயர்த்துவதற்கான பரீட்சைக்கு தோற்றுவதற்கு இயலாது போகும் சந்தர்ப்பத்தில், பின்னர் நடத்தப்படும் உளச்சார்புப் பரீட்சைக்கு அவ்வுத்தியோகத்தருக்கு தோற்ற முடியும். அவ்வாறான உத்தியோகத்தர் ஒருவர் விசேட செயலாற்றுகையின் கீழ் பதவி உயர்வு செய்யப்படும் திகதியாக அந்த பரீட்சையில் சித்திபெறும் திகதியே கவனத்தில் கொள்ளப்படும்.

உளச்சார்புப் பரீட்சையின் பாடத்திட்டம் பின் இணைப்பு "எ" இல் காட்டப்பட்டுள்ளது.

10.2. தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவி உயர்த்துதல் :-
10.2.1. பொதுவான செயலாற்றுகையின் கீழ் :-
10.2.1.1. பூர்த்தி செய்யப்படவேண்டிய தகைமைகள் :-

(i) சேவை வகையில் தரம் II இல் குறைந்த பட்சம் ஒன்பது (09) வருட சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும் இவ் 09 வருட காலப்பகுதியில் 09 சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ii) பதவி உயர்வு திகதிக்கு முன்பதாக ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைகளின் பிரகாரம் பதவி உயர்வு திகதிக்கு முன்னதாக ஒன்பது (09) வருடகாலப் பகுதியிலும் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலாக செயலாற்றுகை மட்டத்தை காண்பித்திருத்தல் வேண்டும் ;

(iv) உரிய வினைத்திறன் காண் பரீட்சைகளில் உரிய திகதியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் .

10.2.1.2. பதவி உயர்வுக்கான நடைமுறை :-தகைமைகளை பூர்த்தி செய்த ஊழியர்கள் அதற்கான படிவத்தில் பதவி உயர்வு கோரி நியமன அதிகாரிக்கு விண்ணப்பித்ததும், நியமன அதிகாரி தகைமைகளை சரிபார்த்த பின்னர் தகைமைபெற்ற ஊழியர்களை அவர்கள் பதவி உயர்வுக்குத் தகுதிபெற்ற திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதத்தில் தரம் I இற்கு பதவி உயர்வு வழங்குவார்.

10.2.2. அதிவிசேட செயலாற்றுகையின் கீழ் :-
10.2.2.1. பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள் :-

(i) சேவை வகையில் தரம் II இல் குறைந்த பட்சம் எட்டு (08) வருட காலம் சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அக்காலப்பகுதியில் உரிய எட்டு (08) சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ii) பதவி உயர்வு திகதிக்கு முன்பதாக ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின் பிரகாரம் பதவி உயர்வு திகதிக்கு முன்பதாக எட்டு (08) வருட காலத்தில் அதிவிசேட செயலாற்றுகையை காண்பித்திருத்தல் வேண்டும் ;

(iv) உரிய வினைத்திறன் காண் பரீட்சைகளை உரிய திகதியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் .

அதிவிசேட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறை ஒன்று அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தி செயற்படுத்தப்படும் வரை தற்போது செயற்படும் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டில் திருப்திகரமான மட்டம் அல்லது அதற்கு கூடிய செயலாற்றுகை மட்டத்தை காண்பித்துள்ள நபர்களுக்கு அதிவிசேட செயலாற்றுகையின் கீழ் எழுத்துமூல உளச்சார்பு/முறைமையான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும்.

10.2.2.2. பதவி உயர்வுக்கான நடைமுறை :- தகைமைகளை பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களுக்கு நியமன அதிகாரியினால் முறைமையான நேர்முகப் பரீட்சை ஒன்று நடத்தப்படும். அந்த முறைமையான நேர்முகப் பரீட்சையில் 50% வீதமான அல்லது அதற்கு கூடிய புள்ளிகளைப் பெறும் உத்தியோகத்தர்கள் தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்டு எட்டு (08) வருடங்கள் பூர்த்தியாகும் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதத்தில் தரம் I இற்கு நியமனம் செய்யும் அதிகாரியினால் பதவியுயர்வு வழங்கப்படும்.

முறைமையான நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் முறைமை பின்னிணைப்பு "ஐ" இல் காட்டப்பட்டுள்ளது.

10.3. தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு பதவி உயர்த்துதல் .
10.3.1. பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள்.

(i) சேவை வகையில் தரம் I இல் குறைந்த பட்சம் ஒன்பது (09) வருட சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருப்பதுடன் அந்த 09 வருட காலத்திலும் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ii) பதவி உயர்வுபெறும் திகதிக்கு முன்னதாக தரம் I இல் ஐந்து (05) வருட கால சேவையை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு அமைய பதவி உயர்வுத் திகதிக்கு முன்னதாக ஒன்பது (09) வருடத்திலும் திருப்திகரமான அல்லது அதற்கு மேலான மட்டத்தில் செயலாற்றுகையை காண்பித்திருத்தல் வேண்டும் ;

(iv) உரிய வினைத்திறன் காண் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

10.3.2. பதவி உயர்வுக்கான நடைமுறை :- தகைமைகளை பூர்த்தி செய்த அலுவலர்கள் அதற்கான படிவத்தில் பதவி உயர்வு கோரி நியமன அதிகாரிக்கு விண்ணப்பித்ததும், நியமன அதிகாரி தகைமைகளை சரிபார்த்த பின்னர் தகைமைபெற்ற ஊழியர்களை தகைமைபெற்ற திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வித்தில் விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவார்.

**11. பதவிகளுக்கு நியமித்தல் :-**

11.1

| பதவி | தகைமைகள் |
|---|---|
| நிலஅளவை கள உதவியாளர் சேவையின் விசேட தரத்தில் நில அளவை ஓவசியர் | நிலஅளவை கள உதவியாளர் சேவையில் விசேட தரத்தில் உள்ள ஊழியர்கள் |

11.2. தெரிவு செய்யும் முறை :- நிலஅளவை கள உதவியாளர் விசேட தரத்தில் சேவை மூப்பின் அடிப்படையில் அதிகமான சேவை மூப்பினை உடையவர்கள் நிலவும் வெற்றிடங்களுக்கமைய நிலஅளவை ஓவசியர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

**12. சேவைக்கு ஏற்புடைய நிபந்தனைகள் :-**

12.1. சகல நியமனங்கள் தொடர்பாகவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பணிநடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிபந்தனைகளும் தாபனக் கோவையின் விதிகளும் நிதிப்பிரமானங்களும் மற்றும் திணைக்கள கட்டளைகளும் ஏற்புடையதாகும்.

12.2. இந்த ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகளில் உள்ளடக்கப்படாத விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

13. **பதவி விளக்கங்களும் பொருள் கோடல்களும்** :

13.1. "சேவைப் பிரமாணம்" என்பது இலங்கை நிலஅளவை கள உதவியாளர் சேவைக்குரிய பிரமாணக் குறிப்பு என்பதாகும்.

13.2. "சேவை" என்பது இலங்கை நிலஅளவை கள உதவியாளர் சேவை என்பதாகும்.

13.3. "நிலஅளவையாளர் நாயகம்" என்பது தற்போது நிலஅளவையாளர் நாயகம் பதவியை வகிக்கும் அல்லது பதிலாக கடமையாற்றும் உத்தியோகத்தர் என்பதாகும்.

13.4. "நடைமுறைக்கு வரும் திகதி" என்பது இந்தப் பிரமாணங்கள் "நடைமுறைக்கு வர ஆரம்பிக்கும் திகதியாகும்.

13.5. "சுறுசுறுப்பான சேவைக்காலம்" என்பது வகிக்கும் பதவிக்குரிய சம்பளங்களை பெற்றுக்கொண்டு, தமக்கு வழங்கப்பட்ட அரச கடமையை நேர்மையுடன் உண்மையாக பணி புரியும் உயிரிப்பான சேவைக் காலம் ஆகும். அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிரசவ விடுமுறை தவிர ஏனைய சகல சம்பளமற்ற விடுமுறை காலப்பகுதி சுறுசுறுப்பு சேவைக் காலம் எனக் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

13.6. "திருப்திகரமான சேவை" என்பது அரச உத்தியோகத்தர் ஒருவர் வினைத்திறனுடனும் விடாமுயற்சியுடனும் கடமைகளைப் புரிவதன் மூலம் உரிய காலத்தில் நிகழும் வினைத்திறன் காண் பரீட்சைகளில் சித்தியெய்துதல் மூலமும் உரிய காலத்தில் நிகழும் சேவை உறுதிப்படுத்தலுக்கான தகைமைகளைப் பெறுவதன் மூலமும் ஆண்டு வேதன ஏற்றங்கள் அனைத்தையும் சம்பாதித்துள்ளதும் அவர் தண்டிக்கப்படத்தக்க தவறு எதனையும் புரிந்திருக்காததுமான காலப்பகுதி எனப் பொருள்படும்.

13.7. "உரிய திகதியில் "குறித்த விளைத்திறன் காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்த வேண்டிய திகதி "உரிய திகதி" எனக் கருதப்படுகிறது. தர உயர்வுகளின் போது உரிய திகதியிலோ அதற்கு முன்னரோ வினைத்திறன் தடைப் பரீட்சையில் சித்தியெய்தும் உத்தியோகத்தர்களுக்கு ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறித்துள்ளவாறு பதவி உயர்வுகள் பெற உரிமை உண்டு. உரிய தினத்தில் சித்தியெய்தத் தவறும் உத்தியோகத்தர்களது பதவி உயர்வுத் திகதி வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தத் தாமதமான காலத்துக்குச் சமமான காலப்பகுதியில் தாமதப்படுத்தப்படல் வேண்டும்.

**உதாரணம்** :- மூன்று வருடங்களுக்குள் சித்தியெய்த வேண்டிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சையை நான்கு ஆண்டுகளில் சித்தியெய்தினால் பத்து வருடங்களில் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு பதினோராம் வருடத்திலேயே கிடைக்கும்.

14. **தரமுறைமைக்கான உள்ளீர்ப்பு** :

தற்போது சேவையிலுள்ள ஊழியர்கள் புதிய தர முறைமைகளுக்கான உள்ளீர்ப்பு செய்யும் நடைமுறை பின்னிணைப்பு "ஏ" இல் தரப்பட்டுள்ளது.

14. சகல நியமனங்கள் தொடர்பாகவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பணி நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிபந்தனைகளும், தாபனக் கோவையின் விதிகளும், நிதிப் பிரமாணங்களும் மற்றும் திணைக்கள கட்டளைகளும் ஏற்புடையதாகும்.

15. **இடைக்கால ஏற்பாடுகள் : ஏற்புடையதன்று.**

பின்னிணைப்பு - "அ"

நிலஅளவைக் கள உதவியாளர்களுக்குப் பொறுப்பான பணிகள் :

(i) அளவை தொடர்பான பருவரைபடம் கீற உதவுதல் ;
(ii) அளவைப் புலப்புத்தகங்கள் மற்றும் கிடைப்படங்களைப் பயன்படுத்தி பழைய எல்லைகளை அவதானிப்பதற்கு ஏதுவாக அளவைக் கோடுகளைத் தயாரித்தல் ;
(iii) அளவை தொடர்பான புலத்தில் பழைய எல்லைகளின் குறித்த முளைகளையும் நிலக் குறிகளையும் திறந்து தயார்படுத்தல்;
(iv) நிலஅளவை தொடர்பான பீடக் குறிகளை இனங்காணவும் நிறுவவும் அளவையில் நிலஅளவையாளருக்கு உதவுதல் ;
(v) களத்தில் அளவைக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் பேணவும், களஞ்சியப்படுத்தவும் உரிய பராமரிப்புப் பணிகளில் உதவுதல் ;
(vi) தியோடோலைற்றுக்கள், மட்டங்கள் மற்றும் புதிய இலத்திரனியல் பூரணமாணிகள் அடங்கலாகச் செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அளவைகளுக்கு களத்தில் அளவைப் புள்ளிகளில் (GPS) புவிசார் இடமறியும் முறைமை உபகரணங்களை நிலை நாட்டுதல் ;

(vii) வான் ஒளிப்படப் பிடிப்புக்குத் தேவையான புவிபாத்த பாலனப் புள்ளிகளை அமைப்பது தொடர்பான சகல கடமைகளிலும் உதவுதல் ;

(viii) அளவைத் தரவுகளைச் சேகரிக்கவும் அளவைகளில் தெரிவு செய்யப்பட்ட எல்லா இடங்களின் மையங்களையும் மட்டங்களையும் தீர்மானிப்பதற்குத் தேவையான இலக்குகளையும், அட்டவணைகளையும் முறையாகப் பேண உதவும் ;

(ix) அளவை நடவடிக்கைகளில் சரியான தரவுகளைப் பயன்படுத்தி களத்தில் நிலக்குறிகளையும் பீடக் குறிகளையும் நிறுவுதல்;

(x) கள ஏடுகளையும், சுவடு வரைதல்களையும் பயன்படுத்தி பூர்வாங்க நடவடிக்கையாக காணித்துண்டுகளின் எல்லைக் குறியீடுகளை நிர்ணயிக்க உதவுதல்;

(xi) நிலஅளவையாளர் நாயகம் அல்லது அவரது பிரதிநிதியினால் ஒப்படைக்கப்படும் நிலஅளவை தொடர்பான எந்தவொரு கடமையிலும் ஈடுபடுதல் ;

(xii) நிலஅளவை கள உதவியாளர் தரத்தில் ஓவசியர் பதவி வகிப்போருக்கு மேற்குறித்த கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய நிலஅளவைக் கள உதவியாளரின் பணிகளை மேற்பார்வை செய்தலும் பொறுப்பாகும்.

பின்னிணைப்பு - "ஆ"

இலங்கை நிலஅளவைக் கள உதவியாளர்களுக்கு உரித்தான திணைக்களங்கள் :

1. நிலஅளவைத் திணைக்களம்.
2. காணி ஆணையாளர் திணைக்களம்
3. புகையிரதத் திணைக்களம்.

பின்னிணைப்பு - "இ"

1. பரீட்சையின் பெயர் தரம் III க்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை
2. பரீட்சை தொடர்பான விபரங்கள் :

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| பொதுஅறிவு | 2 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| நுண்ணறிவு | 1 மணித்தியாலமும் 15 நிமிடங்களும் | 100 | 40 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரம் பெற்றவர் நிலஅளவையாளர் நாயகம்
4. எவ்வளவு காலத்துக்கொருமுறை பரீட்சை நடத்தப்படும் என்பது தேவைக்கமைய
5. பரீட்சைக்கான பாடத்திட்டம்.

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. பொது அறிவு | இவ்வினாத்தாள் விண்ணப்பதாரி தாம் வதியும் சுற்றாடல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக, கலாசார பொருளாதாரப் பின்னணியுடன் விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியமான பொது விடயங்கள் தொடர்பாகப் பெற்றுள்ள அறிவைப் பரிசோதிப்பதாக அமையும். |
| 2. நுண்ணறிவு | இது விண்ணப்பதாரியின் சிந்திக்கும் ஆற்றல், அலசி ஆராயும் ஆற்றல், சமயோசிதமாகத் தீர்மானம் எடுக்கும் திறமை போன்றவற்றை அளவிடும் பல தேர்வு வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாத்தாளாகும். |

பின்னிணைப்பு - "ஈ"

1. பரீட்சையின் பெயர் I ஆவது விளைத்திறன் காண் பரீட்சை
2. பரீட்சை பற்றிய விபரங்கள்.

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| செயல்முறைப் பரீட்சை | - | 100 | 40 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரம் பெற்றவர் : நிலஅளவையாளர் நாயகம்.
4. எவ்வளவு காலத்துக்கொருமுறை பரீட்சை நடத்தப்படும் என்பது : ஆண்டுக்கு இருமுறை.
5. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| செயல்முறைப் பரீட்சை | கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய அறிவு மற்றும் செயலாற்றல் தொடர்பாகப் பரீட்சிக்கப்படும்.<br>(i) அதிகளவில் அளவைக்காகப் பயன்படுத்தப்படும் நிலஅளவை உபகரணங்களது பெயர்களுடன் அவற்றைச் சரிவரப் பாவிக்கும் முறைகளும், பராமரிப்பும் ;<br>(ii) நேர்க்கோடுகள் மற்றும் 90 கோண ஒழுங்குகள் ;<br>(iii) அளவை உபகரணங்கள் - தியோடலைற்று மற்றும் மட்டமாக்கி களைக் குறித்த புள்ளியில் சீராக்குதல், உபகரணங்கள் பொருத் தப்படுகையில் முக்காலியைக் கையாளும் சரியான முறை ;<br>(iv) சங்கிலியளவை<br>(அ) சங்கிலியை நீட்டுதல், சுத்தம் செய்தல் மற்றும் இழுத்துக்கொண்டு போகும் சரியான முறை ;<br>(ஆ) சமப்படுத்தும் கருவியைப் பயன்படுத்தலும், ஆதாரம் கொடுக்கப்பட்டுள்ள சங்கிலிகளைக் கண்மட்டத்தில் சீராக்குதலும் ;<br>(இ) முன்சங்கிலி, பின்சங்கிலி தொடர்பான வேலை ;<br>(ஈ) சங்கிலிகள் மற்றும் நடாக்களை வாசித்தல்.<br>(v) அளவிட பருவரையை வாசித்தல் ;<br>(vi) பொதுவான அலுவலக நடைமுறைகள் மற்றும் நிறுவன நிர்வாக செயன்முறை கள் குறித்து இச்சேவைக்கு ஏற்புடையதான அறிவு. |

பின்னிணைப்பு - 'உ"

1. பரீட்சையின் பெயர் II ஆவது விளைத்திறன் காண் பரீட்சை
2. பரீட்சை பற்றிய விபரங்கள்.

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| எழுத்துமூலப் பரீட்சை | 2 மணித்தியாயலம் | 100 | 40 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரம் பெற்றவர் : நிலஅளவையாளர் நாயகம் ;
4. எவ்வளவு காலத்துக்கொருமுறை பரீட்சை நடாத்தப்படும் என்பது : ஆண்டுக்கு இருமுறை
5. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| எழுத்து மூலப் பரீட்சை | இப்பரீட்சையில் செய்யப்படவேண்டிய வேலை அளவு, நிலக் குறிகள் தொடர்பான விடயங்கள், லீவு உரிமைகள், பண உறுதிச் சீட்டுக்கள் தயாரித்தல், பிரயாணச் செலவுகள் தொடர்பான விதிகளை அறிந்திருத்தல், உத்தியோகபூர்வக் கடிதங்களை எழுதுதல், களப்புத்தகத்தில் பதிவிடுதல் மற்றும் வாசித்தல் தொடர்பான அறிவு, வரிப்படம் வாயிலாகக் கள இடங்களைக் கண்டறிதல், ஒரு வரிப்பட அளவிடையைக் கொண்டு தூரத்தை அறிந்து கொள்ளல் நானாவித அளவைகள் பற்றிய அறிவு, திணைக்களத்தின் கருவிகளினதும் அளவை உபகரணங்களினதும் பாதுகாப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பான அறிவும், விளங்கிக் கொள்ளுதலும் பரீட்சிக்கப்படும். |

பின்னிணைப்பு - "ஊ"

1. பரீட்சையின் பெயர் III ஆவது வினைத்திறன் காண் பரீட்சை
2. பரீட்சை பற்றிய விபரங்கள்.

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| வாய்மொழிப் பரீட்சை | 15 நிமிடங்கள் | 100 | 40 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரம் பெற்றவர் : நிலஅளவையாளர் நாயகம் ;
4. எவ்வளவு காலத்துக்கொருமுறை பரீட்சை நடாத்தப்படும் என்பது : ஆண்டுக்கு இருமுறை
5. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| வாய்மொழிப் பரீட்சை | நிலஅளவையாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் தகைமையுடைய நேர்முகப்பரீட்சைச் சபையினால் உரிய வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும். தாபன விதிக் கோவையின் விதிமுறைகள், நிதி ஒழுங்கு விதிக்கோவையின் விதிமுறைகள், களஞ்சியப்படுத்தல் தொடர்பான பொது அறிவு, ஆளணி முகாமை குறித்த அறிவு, களக் கடமைகள் பற்றிய அறிவு போன்றவற்றை பரீட்சிக்கும் பரீட்சையாகும். |

பின்னிணைப்பு - "எ"

1. பரீட்சையின் பெயர் : அதிவிசேட செயலாற்றுகையின் கீழ் தரம் III இலிருந்து தரம் II இற்கு பதவி உயர்த்துவதற்கான எழுத்து மூல உளச்சார்புப் பரீட்சை.
2. பரீட்சை தொடர்பான விபரங்கள்.

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| எழுத்து மூல உளச் சார்புப் பரீட்சை | 2 மணித்தியாலங்கள் | 100 | 60 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரம்பெற்றவர் : நிலஅளவையாளர் நாயகம் .
4. எவ்வளவு காலத்துக்கொரு முறை பரீட்சை நடாத்தப்படும் என்பது, ஆண்டுக்கு ஒரு முறை
5. பரீட்சைக்கான பாடத்திட்டம்.

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| எழுத்து மூல உளச் சார்புப் பரீட்சை | களப் புத்தகக் குறிப்புகள் பதிதலும், வாசித்தலும், நானாவித அளவைகள் பற்றிய அறிவு, வரிப்படவாயிலாக கள இடங்களைக் கண்டறிதல், அளவைக்குரிய புலத்தில் பழைய எல்லைகளில் குறித்த முறைகளையும் நிலக்குறிகளையும் நிறுவுதலும், திறத்தலும், களத்தில் பாவிக்கும் உபகரணங்களைப் பாதுகாத்தல், களஞ்சியப்படுத்தல், பராமரித்தல் விடயங்களுக்கு உதவுதல், சரியான தரவுகளை பயன்படுத்தி நிலக்குறிகளையும், பீடக்குறிகளையும் நிறுவுதல், பல்வேறு நிலக்குறிகள் தொடர்பான விடயங்கள், லீவு உரிமைகள், தொழில்சார் பொறுப்புகள் மற்றும் நன்னெறி முறைகள் குறித்த அறிவு, உத்தியோகபூர்வக் கடிதமெழுதுதல் போன்ற தம்மிடம் ஒப்படைக்கப்படும் சகல பணிகளையும் சாதாரணச் செயலாற்றுகை மட்டத்தைத் தாண்டிய செயற்திறனுடன் நிறைவேற்றத் தேவைப்படும் அறிவாற்றலும், கோட்பாடுகள் போன்ற உத்தேசத் தேர்ச்சியை பெற்றுள்ளாரா எனப் பரீட்சிக்கப்படும். |

*பின்னிணைப்பு - "ஏ"*

*சேவையில் ஈடுபட்டுள்ளோரை உள்ளீர்த்தல் (உரிய திகதியில் சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் பொருந்தும்)*

*புதிய ஆட்சேர்ப்பு விதிகள்/சேவைப் பிரமாணங்கள் செயல்வலுப் பெறும் திகதியில் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/2006* (IV) *இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள சம்பளக் குறியீட்டு இலக்கம்* PL 2 - 2006 - A *இன் கீழ் சம்பளம் பெறும் சகல ஊழியர்களும் புதிய ஆட்சேர்ப்பு விதிகள்/சேவைப் பிரமாணங்கள் செயல்வலுப் பெறும் திகதியில்* PL 2 - 2006 - A *சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் பெற்றிருந்த தர முறைமையை அடிப்படையாகக் கொண்டு தாபன விதிக் கோவையின் அத்தியாயம்* VII *பிரிவு 4 இல் உள்ள சம்பள மீளாய்வுச் செயல் முறைக்கமையப் பின்வரும் தர முறைமைக்கு உள்வாங்கப்படுவர். குறித்த தரங்களுக்கு நியமிக்கப்பட்ட திகதியின் அடிப்படையில் சேவைக்காலம் கணக்கிடப்பட வேண்டும். எவ்வாறாயினும் உள்ளீர்க்கப்படுவதன் காரணமாக உரிய நபரின் வேதன ஏற்றத் திகதியில் மாற்றமேதும் நிகழக்கூடாததுடன், அத்திகதி உள்ளீர்ப்புக்கு முன்பு நிலவிய வேதன ஏற்றத் திகதியாகவே மாற்றமின்றிச் செயற்பட வேண்டும். அதேபோல் சம்பள மீளாய்வின் போது குறித்த நபர் கடைசியாகப் பெற்ற வேதனப்படிநிலை புதிய வேதனப்படி நிலையுடன் சமமாவதன் கீழ் அடுத்த உயரிய வேதனப்படி நிலையில் வைக்கப்படுவதும் நிகழலாகாது.*

(i) PL 2- A *தரம்* III

(அ) PL 2 - 2006 - A *சம்பள அளவுத்திட்டத்தில் தரம்* III *இற்குரிய வேதனப்படி நிலை பெற்றுள்ள பதவியொன்றில் அல்லது தரத்தில் குறைந்த பட்சம் 10 வருடகாலச் சேவையைப் பூர்த்திசெய்யாத ஊழியர்கள் ;*

(ஆ) *மேற்கூறப்பிட்டவாறு தரம்* III *இற்கு ஏற்புடைய பதவி அல்லது தரத்தில் குறைந்த பட்சம் 10 வருடங்களோ அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியிருந்தாலும் தரம் தரம்* II *இற்கு உள்ளீர்க்கப்படத் தேவையான ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத ஊழியர்கள் தரம்* PL 2 - *தரம்* III *இற்கு உள்ளீர்க்கப்படுவர்.*

(ii) PL 2- A *தரம்* II

(அ) *மேற்கூறப்பட்டவாறு தரம்* III *இற்கு ஏற்புடைய பதவி அல்லது தரத்தில் குறைந்த பட்சம் 10 வருடங்களோ அல்லது அதற்குக் கூடுதலான எனினும் 20 வருடங்களுக்குக் குறைவான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த அதேபோல் ஆகக் குறைந்தது பத்து (10) வருடகால திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் புதிய சேவைப் பிரமாணங்கள் / புதிய ஆட்சேர்ப்பு விதிகள் செயல்வலு பெறுவதற்கு முன்னர் செயல்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகள்/சேவைப் பிரமாணங்களுக்கு அமைய ஏனைய சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த ஊழியர்கள்.*

(ஆ) PL 2 - 2006 - A *சம்பள அளவுத்திட்டத்தில் தரம்* II *இற்கு ஏற்புடைய வேதனப்படி நிலையில் வைக்கப்பட்டுள்ள பதவி அல்லது தரத்தில் குறைந்தது 09 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாத ஊழியர்கள்.*

(இ) *மேற்கூறப்பட்டவாறு தரம்* II *இற்கு ஏற்புடைய ஒரு பதவியில் அல்லது தரத்தில் 09 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள போதும் புதிய ஆட்சேர்ப்பு விதிகள்/புதிய சேவைப் பிரமாணங்கள் செயல்வலுப் பெறும் திகதிக்கு முன்னர் செயற்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகள் /சேவைப் பிரமாணங்களுக்கு அமைய தரம்* I *இற்குப் பதவியுயர்த்தப்படுவதற்குத் தேவையான ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத ஊழியர்கள்* PL 2 - *தரம்* II *இற்கு உள்ளீர்க்கப்படுவர்.*

(iii) PL 2 - *தரம்* I

(அ) *மேற்கூறப்பட்டவாறு தரம்* III *இற்கு ஏற்புடைய பதவி அல்லது தரத்தில் குறைந்த பட்சம் 20 வருடம் அல்லது அதற்குக் கூடுதலான எனினும் 30 வருடங்களுக்கும் குறைவான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அதேபோல் உரிய காலப்பகுதியில் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ள மற்றும் புதிய சேவைப் பிரமாணங்கள்/புதிய ஆட்சேர்ப்பு விதிகள் செயல்வலுப் பெறும் திகதிக்கு முன்னர் செயறபடுத்தப்பட்ட சேவைப்பிரமாணங்கள் / ஆட்சேர்ப்பு விதிகளுக்கமைய ஏனைய சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த ஊழியர்கள் ;*

(ஆ) *மேற்கூறப்பட்டவாறு தரம்* II *இற்கு ஏற்புடைய பதவி அல்லது தரத்தில் குறைந்த பட்சம் 09 வருடம் அல்லது அதற்குக் கூடுதலான எனினும் 19 வருடங்களுக்கும் குறைவான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அதேபோல் குறித்த காலப்பகுதியில் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளதுடன் மேற்குறித்த ஏனைய சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த ஊழியர்கள்*

(இ) PL 2 - 2006 - A சம்பள அளவுத்திட்டத்தில் தரம் I இற்கு ஏற்புடைய வேதனப்படி நிலையில் வைக்கப்பட்டுள்ள ஒரு பதவியில் அல்லது தரத்தில் குறைந்த பட்சம் 09 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாத ஊழியர்கள் ;

(ஈ) மேற்கூறப்பட்டவாறு தரம் I இற்கு ஏற்புடைய ஒரு பதவியில அல்லது தரத்தில் 09 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருந்தும் விசேட தரத்துக்குப் பதவி உயர்த்தப்படுவதற்கு தேவையான ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத ஊழியர்கள் PL 2 - தரம் I இற்கு உள்ளீர்க்கப்படுவார்கள்.

(iv) PL 2 - விசேட தரம்

(அ) மேற்கூறப்பட்டவாறு தரம் III இற்கு ஏற்புடைய ஒரு பதவியில் அல்லது தரத்தில் குறைந்த பட்சம் 30 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அதேபோல் அக்காலப்பகுதியில் எல்லா வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளதுடன் புதிய சேவைப் பிரமாணங்கள் /புதிய ஆட்சேர்ப்பு விதிகள் செயல்வலுப் பெறும் திகதிக்கு முன்னர் செயற்படுத்தப்பட்ட சேவைப் பிரமாணங்கள்/ஆட்சேர்ப்பு விதிகளுக்கமைய தேவையான ஏனைய சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள்.

(ஆ) மேற்கூறப்பட்டவாறு தரம் II இற் ஏற்புடைய ஒரு பதவியில் அல்லது தரத்தில் குறைந்தபட்சம் 19 வருடகாலச் சேவையைப் பூர்த்தி செய்து அக்காலப்பகுதியில் வேதன ஏற்றங்களையும் பெற்று மேற்குறித்த ஏனைய சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த ஊழியர்கள் ;

(இ) மேற்கூறப்பட்டவாறு தரம் I இற்கு ஏற்புடைய ஒரு பதவியில் அல்லது தரத்தில் குறைந்த பட்சம் 09 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அதேபோல் உரிய காலப்பகுதியில் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளதுடன் மேற்குறித்த ஏனைய சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் ;

(ஈ) PL 2 - 2006 - A சம்பள அளவுத்திட்டத்தில் விசேட தரத்துக்கு ஏற்புடைய வேதனப்படி நிலையில் வைக்கப்பட்டுள்ள ஒரு பதவியில் அல்லது தரத்தின் கீழ் சம்பளம் பெறும் ஊழியர்கள்.

PL 2 - விசேட தரத்துக்கு உள்ளீர்க்கப்படுவர்.

பின்னிணைப்பு - "ஐ"

1. பரீட்சையின் பெயர் அதிவிசேட செயலாற்றுகையின் கீழ் தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவி உயர்த்துவதற்கான முறைமையான நேர்முகப் பரீட்சை .

2. பரீட்சை தொடர்பான விபரங்கள்.

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| முறைமையான நேர் முகப்பரீட்சை | 20 நிமிடங்கள் | 100 | 50 அல்லது அதற்கு மேல் |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரம் பெற்றவர் : நிலஅளவையாளர் நாயகம் .
4. எவ்வளவு காலத்துக்கொரு முறை பரீட்சை நடாத்தப்படும் என்பது : ஆண்டுக்கு ஒரு முறை.
5. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் | புள்ளியிடும் முறை |
|---|---|---|
| முறைமையான நேர்முகப் பரீட்சை | நிலஅளவைக் கள வேலைகள் பற்றிய அறிவினை பரிசோதித்தல்<br>தாபனக் கோவை பற்றிய அடிப்படை விதிகள் பற்றிய அறிவு<br>நிதிப்பிரமாணங்கள் பற்றிய அடிப்படை அறிவு<br>நிலஅளவை உபகரணங்கள் களஞ்சியப்படுத்தல் பற்றிய அறிவு ஆற்றல்.<br>ஆளணி நிர்வாகம் பற்றிய அறிவு ஆளுமை. | 20<br>20<br>20<br>10<br>20<br>10 |

பின்னிணைப்பு - "ஐ"

1. பரீட்சையின் பெயர் : அதிவிசேட செயலாற்றுகையின் கீழ் தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவி உயர்த்துவதற்கான முறைமையான நேர்முகப் பரீட்சை.

2. பரீட்சை நடாத்தும் அதிகாரம் பெற்றவர் : நிலஅளவையாளர் நாயகம்.

3. எவ்வளவு காலத்துக்கொரு முறை பரீட்சை நடாத்தப்படும் என்பது ஆண்டுக்கு ஒரு முறை

4. பரீட்சைக்கான பாடத்திட்டம்.

| புள்ளிகள் இடுவதற்கான பரீட்சிக்கப்படும் துறைகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| 1. கடமையின்போது திணைக்களத்திற்கான விசேட பங்களிப்பு (ஒவ்வொரு பங்களிப்புக்கும் 05 புள்ளிகள்) | 50 |
| 2. செயலாற்றுகை மதிப்பீடு (பதவியுயர்வு திகதிக்கு நேரடி முன்னதாக 5 வருடங்களுக்கு)<br>மிகவும் நன்று - 09 புள்ளிகள்<br>நன்று - 06 புள்ளிகள்<br>திருப்தி - 03 புள்ளிகள் | 45 |
| 3. நேர்முகப் பரீட்சையில் காட்டப்பட்ட இயல் தகவு | 05 |
| மொத்தம் | 100 |

3- 849